உ

சிவமயம்.

தெக்ஷிணகேதாரமென்னும்

அத்திப்புலியூர் க்ஷேத்திரத்தின்

# ஸ்தலபுராணம்.





அத்திப்புலியூர்

துரைஸாமி முதலியாரவர்களால்

வெளியிடப்பட்டது.

S. B. Press, Negapatam.

1914.

இதன் விலை] [அணா 4.

உ

சிவமயம்.

தெக்ஷிணகேதாரமென்னும்

# அத்திப்புலியூர் க்ஷேத்திரத்தின்

# ஸ்தலபுராணம்.

இஃது

பவிஷ்ய உத்தரபுராணம்,

ஸம்ஸ்கிருதம் நூறுமுதல் நூற்றியாறுவரையிலுள்ள அத்தியாயங்கள்

பழய எட்டுப்பிரதியாக இருந்ததை யாவருக்கும் தெரியும்படி

அத்திப்புலியூர் சோமசுந்தரமுதலியார் பிள்ளை

**துரைசாமி முதலியாரவர்கள்**

கேட்டுக்கொண்டதின் பேரில்,

---

குருமணங்குடி ருமுவய்யர் குமாரர்

**மகா-ா-ஸ்ரீ சாம்பசிவ அய்யரவர்களால்**

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

---

நாகபட்டணம்

ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸில்


P. L. வேங்கிட்டராம சாஸ்திரியள் அவர்களால்

பதிப்பிக்கப்பட்டு

ஷை துரைசாமி முதலியாரவர்களால் வெளியிடப்பட்டது.


---

இதன் விலை 1914 அணா 4.



## முகவுரை.

இவ்வுலகத்தில் சப்தசாகரம், சப்த பர்வதம் சூழ்ந்து ஸப்ததீவுள்ள பூமண்டலமானது அன்பதுகோடி யோசனை விசாலமுள்ளதாயும் அநேகப்புண்ணிய க்ஷேத்திரங்களால் நிறைந்தும் அன்பத்தாறு தேசத்துடன் விளங்கிவரும் இப்பூமியின்கண் அநேக க்ஷேத்திரங்களால் பக்தர்களுக்கு முக்திகொடுக்கும் ஸ்தலங்களில் ஒன்றும் பிர்ம்மாவினால் பூஜிக்கப்பட்டு சாபத்தால் யானையாய் இருந்து பூஜைசெய்து முக்தி பெற்றதால் அத்தி யென்றும்' பிறகு வியாக்கிரபாதரிஷியால், பூஜை செய்யப்பட்டு அவரால் தம்முடைய நாமத்தை ஸ்தாபித்து அதனால் புலியென்றும், இவ்விருநாமத்தால் (அத்திப்புலியூர்) யென்று பேர்வழங்கிவரும் இத்தலத்தின் மகிமையை ஸம்ஸ்கிருதபாஷையில் பவிஷிய உத்தரபுராணம் யென்னும் மகிமை தங்கிய கிரந்தத்தின் நூராவதுமுதல் நூத்திஆராவது வரையிலுள்ள அத்தியாயங்களின் பொருளைத்தமிழில் மொழிபெயர்த்து யெழுதி இருப்பதையாவரும் பார்த்து ஆனந்தக்களிப்புடன் அந்தஸ்தலத்தின் மகிமையைக் கொண்டாடும்படி பிரசித்தம் செய்யப்பட்டது.



உ

# ஸ்தலவிசேடம்.

ஸ்தல விருக்ஷம் புன்னாகம், பில்வம், பலாசம், இப்போது குருவிந்தம். பாண்டியருஜன் சாபத்தால் யானையாய் வந்து பூஜித்து முத்திபெற்றது. வியாக்கிரபாத ரிஷியால் பூஜிக்கப்பட்டது. கேதார மகாரிஷியால் பூஜிக்கப்பட்டது. ஆதியில்பிர்ம்மாவினால் பூஜித்து பிர்மபட்டம் பெற்றது. வசிஷ்டர், வியாசர், நாரதர், ஜனகாதிகளால் சேவிக்கப்பட்டது. சுவாரோசிஷ மனுவானவரித்தலத்தில் தவம்புரிந்து மனுப்பட்டம் பெற்றார். விசுவாமித்திரரிஷி இவிடம்தவம்புரிந்து பிர்மரிஷிப்பட்டம்பெற்றார் நாரதமகாமுனிவர் தவம்புரிந்து கானவித்தையும் வீணையும் பெற்றார். கருடன்பூஜித்து அமுர்தகலசம் பெற்றது. இப்போது பஞ்சமூர்த்திகளுடனும் விளங்கிவருகிறது. இதில் விசேஷதீர்த்தங்கள்:-ஆலயத்திற்கு கீழ்புரம் பிர்மதீர்த்தமென்றும் கெருடதீர்த்தமென்றும் தீர்த்தங்களும், தென்பக்கம் சன்னதியில் கேதார தீர்த்தமென்றும் அகஸ்திய தீர்த்தமென்றும், மேல் பக்கம் வியாக்கிரபாத தீர்த்தமென்றும், வடபக்கத்தில் கெஜதீர்த்தமென்றும், விளங்கிவருகிறது. இந்தப் பஞ்சதீர்த்தங்களிலும், ஸ்நானம்செய்து, சிவபிரானுக்கு புஷ்பபத்திரங்களால் அர்ச்சித்தால், அநேகவித புண்ணியங்களும், சாயுஜ்ஜிய பதவியும் கிடைக்கும். மேலும் அகஸ்தியமகாமுனிவருக்கு திருமணக்கோல தெரிசனம் இவ்விடத்தில் கிடைத்திருக்கிறது. ஷை ஸ்தலத்தின் நாமங்கள் தக்ஷிணகேதாரம பிர்மபுரி, தக்ஷிணசிதம்பரம், அத்திவியாக்கிரபுரி, இப்போது அத்திப்புலியூர். சுவாமிபெயர்:-ஸ்ரீ சிதம்பரேச்வரசுவாமி, அம்மைபெயர்;-ஸ்ரீசிவகாமி அம்மை.

உ

சிவமயம்

தேஷிணகேதாரமேன்னும்.

# அத்திப்புலியூர் க்ஷேத்திரத்தின்

# ஸ்தல புராணம்.

கணபதிஸ்துதி

வானுலகும் மண்ணுலகும் வாழமறைவாழ
பான்மைதருசெய்ய தமிழ்ப்பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலி செய்கிற்பாம்

சுப்பிரமணியர்ஸ்துதி.

பாருமுகமும் பொருந்தப் பருந்து விருந்துணக்கழுகு
நூருமுகமாயணைந்து நூழில் படுகளம்புகுத
மாறுமுகந் தருநிருதர் மடியவடி வேலெடுத்த
ஆருமுகன் றிருவடித் தாமரையிணைகளவைபோற்றி

சபாநாயகர்துதி

உண்மையறிவானந்த உருவாகி யெவ்வுயிர்க்கு முயிராய்நீரின்
றண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசராசரங்களீன்ற
பெண்மையுரு வாகியதன் னானந்தக்கொடிமகிழ்ச்சிப்பெருகயார்க்கு
மண்மையதாயம்பலத்துள்ளாடியருள்பேரொளியையகத்துள்வைப்பாம்

பராபரமுதலேபோற்றி பக்தியில் விளைவாய்போற்றி
சராசரமாகிவேருய் நின்றதற்பரனே போற்றி
கராசலவுரியாய் போற்றி கனகவம்பலத்துளாடு
நிராமயபரமானந்த நிருத்தனே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

1. முத்தினைமணியைப்பொன்னை முழுமுதற்பவளமேய்க்குங்
கொத்தினைவயிரமாலைக் கொழுந்தினையமரர்சூடும்
வித்தினைவேதவேள்விக் கேள்வியைவிளங்காநின்ற
வத்தனைநினைக்தநெஞ்ச மழகிதாநினைக்தவாறே

2. முன்பனையுலகுக்கெல்லா மூர்த்தியைமுனிகளேத்து
மின்பனையிலங்குசோதி யிறைவனையறிவையஞ்ச
வன்பனைத்தடக்கை வேள்விக்களிற்றினையுரித்தவெங்க
ளன்பனைநினைந்தநெஞ்ச மழகிதாநினைந்தவாறே

3. கரும்பினுமினியான்றன்னைக் காய்கதிர்ச்சோதியானை
யிருவகடலமுதந்தன்னை யிறப்பொடுபிறப்பிலானைப்
பெரும்பொருட்கிளவியானைப் பெருந்தவமுனிவரேத்து
மரும்பொனைநினைந்த நெஞ்சமழகிதாநினைந்தவாறே.

சம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த கேதாரம் பண்

தொண்டரஞ்சுகளிருமடக்கிச்சுரும்பாரர்மல
ரிண்டைகட்டிவ்வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்று துள்ளவ்வரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே
வாய்ந்தசெந்நெல்விளை கழனி மல்கும்வயற்காழியா
னேய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்ற கேதாரத்தை
யாய்ந்துசொன்னவருந்தமிழ்கள்பத்தும்மிசைவல் லவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே.

## புந்நாகவன மகிமை.

நைமிசாரண்யத்தில் சூதபுராணிகர் சௌனகாதிரிஷிகளுக்கு இப்புவனங்களிலுள்ள ஸ்தலங்களின் மகிமைகளையும், சிவபிரானுடைய பெருமைகளையுஞ், பக்தர்களுடைய அருமைகளையும், ரிஷிகளுடைய பொறுமைகளையும் சொல்லிவரும் சமயத்தில சௌனகமுனியானவர் சூதபுராணிகரைப் பார்த்து, ஓ கிருபைக்கடலே! எங்கள் மனதிலிருக்கும சந்தேகத்தைப்போக்க வந்த புண்ணியபுருடனே! தாங்கள் இதுவரையில் சொல்லிவந்த சிவபிரானுடைய க்ஷேத்திர மகிமைகளில், உத்திரகேதாரத்தினுடைய மகிமையைக் கேட்டவெங்களுக்குத் தெக்ஷிண கேதாரத்தின் மகிமையை அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து, மேலும் ஸ்வாயம்புவ க்ஷேத்திரமாயும், கேதார மகரிஷியால் பூஜிக்கப்பட்டதுமாயுமுள்ள இக்ஷேத்திரத்தின் மகிமையையும், அருமையையும், பெருமையையும் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர்.

கேளீர் சௌனகாதிரிஷிகளே! தாங்கள் சிவபக்தியுடைய வர்களாயும், சிவபிரானுடைய மகிமையைக்கேட்க விருப்பமுள்ளவராயு மிருப்பதால் சொல்லுகிறேனென்று சொல்லிவருகிறார். ஓ ரிஷிகளே! இப்பூமியின் கண்ணுள்ள க்ஷேத்திரங்களின் மகிமையைச்சொல்ல நான் வல்லவனல்லவென்று குருவாகிய வேத வியாசருடைய அனுக்கிரகத்தால் தெரிந்த வரையில் சொல்ல ஆரம்பிக்கிறேன். கிருதயுகத்தின் ஆரம்பத்தில் ரோமசன்மாவென்னும் மகரிஷிக்கு கேதாரர், பேராளர் என்று இரண்டு புத்திரர்களுண்டு. இவ்விருவரும் சப்த, ஸ்பரிஸ, ரூப, ரச, கெந்த மென்னும் பஞ்ச இந்திரியங்களையும் அடக்கி, காம. குரோத, லோப, மோக, மத, மாற்சரியமென்னும் அரிஷ்டவர்க்கங்களை விலக்கி திருநீறணிந்த மேனியும், பஞ்சாக்ஷரஜபம் செய்யும் வாணியும் வேதபாராயணஞ்செய்ததில் மனதை நிறுத்தி ஜடைகமண்டலம் மரையுரி கிருஷ்ணாஜினம் இவைகளைத்தரித்து தியானம், சீலம், தவம் முதலிய குணத்தை அடுத்து தீர்த்தயாத்திரைசெய்து, சிவபெருமானைத்தெரிசிக்க நினைத்து, அஷ்டாங்கயோகத்தைப் பிடித்து ஆசாபாசங்களை அறுத்து இப்பூமியிலுள்ள சுகாதிகளை வெறுத்து, அநேக க்ஷேத்திரங்களைப் பார்த்துப் பூர்வ புண்ணியபவசத்தால் மாயூரம் என்னும் க்ஷேத்திரத்தை அடைந்து காவேரிஸ்நானம் முடித்து கவுரிமாயூரநாதரைத்தரிசனம்செய்து மகிழ்ந்து ஆனந்தக்கடலிலாழ்ந்து பலவித ஸ்தோத்திரம்புரிந்து அவ்வூரைக்கடந்து தெற்குமுகம் நோக்கி பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் பஞ்சக்ஷேத்திரங்களில் முதலில் சொல்லிய பிரிதிவி என்னும் க்ஷேத்திரமடைந்து வன்மீகநாதரைத் தெரிசிக்கநினைந்து கால்நடையாக நடந்துவரும்போது மத்தியிலிருக்கும் க்ஷேத்திரத்தின்கண் தபசு செய்யும் ரிஷிகளுடைய கூட்டமும், வாசனைகளைத்தரும் புஷ்பத்தோட்டமும், அடர்ந்திருக்கும் மரங்களினுடைய, நோட்டமும் அக்கினி தீர்த்தமென்னும் புஷ்கரணியில் ஜனங்கள் ஆடும் நீராட்டமும், பாடலிதரு மூலத்தில் வசிக்கும் லிங்கமூர்த்தியின் தரிசனத்திற்கு வரும் கூட்டமும் பார்த்து மேனிபூரித்து சரீரம் வேர்த்து ஆனந்தக்கண்ணீர் வார்த்து லிங்கமகிமையை மனத்துடன் சேர்த்து அவ்விடத்திலேயே தங்கி யீசனைக்கண்டு மணம்

பொங்கி ரிஷிக்கூட்டங்களுடன் வெகு காலம் தவம்புரிந்து மூத்தவராகிய பேராளர் யென்பவர் சிவபிரானைப்பூசித்து அவ்வூருக்குத் தனது பேராகிய நாமாவைப்பேரளமென்று ஸ்தாபித்து சிவனைத்தியானித்து அவ்விடத்தில் வசித்துக் காலத்தைக்கழித்தார். இப்பால் கேதாரர் யென்பவர் தமயனைவிட்டு அநேக க்ஷேத்திரங்களின் புலன்பட்டு விருத்தகாவேரி யென்னும் கடுகையாற்றுக்கு வடபுரமிருக்கும் குருவிந்தவனமடைந்து அவ்விடமிருக்கும் ரிஷிகளைப்பணிந்து சாலதால தபாலாதிகளான மரங்களாலடர்ந்து மயில்குயில் சக்கிரவாகம் முதலிய பக்ஷிப்பேடுகள் ஒன்றோடொன்று கலந்து உல்லாசமாகப் புணர்ந்து விளையாடும் வேடிக்கைகளைக்கண்டு மனமகிழ்ந்து தானும் அவ்விடத்திலிருந்து தவம்புரிய மனதில் நினைந்து நிற்கும் கேதார ரிஷியைக்கண்டு மிகஆனந்தங்கொண்டு இந்தமகானுபாவனை நம்மோடு இருக்கச்செய்ய வேண்டுமென்று நினைத்த அந்தரிஷிக்கூட்டமானது சமீபத்தில்வந்து கேதாரரைப்பணிந்து அத்திபூசை அருந்தும் என்றுபிரார்த்தித்து சொல்லுகிறார்கள். ஓமகானுபாவா தாங்கள் வசிக்குமிடம் தங்கள்பாததூளியின் மகிமையினால் பரிசுத்தமுள்ளதாயும் மகாபாதகங்களைப் போக்கும்காசி க்ஷேத்திரத்திற்குச் சமனாயும் அநேகபுண்ணியக்ஷேத்திரங்களில் ஸ்பரிசுத்தமாயும் இருக்கும் தங்கள்பாதாரவிந்தந் தரிசனங்கிடைத்ததுமன்னியில் நாங்களும் புநிதனாகிவிட்டோம் ஏனென்றால் தங்களைப்போலொத்த சாதுக்களுடைய சல்லாபமானது அநேக பாதகங்களைப்போக்கி பரிசுத்தம் செய்வதென்பது சந்தேகமில்லை அதுயாதெனில்: கங்காஸ்நானமானது பாபத்தை விலக்கும். சூரியகாந்தியால் உண்டாகும்வெப்பத்தை சந்திரகிரஹணமானது, சமானமாக்கும். கற்பகவிருக்ஷமானது, தன்னை ஆதரித்தவருடைய தரித்திரத்தைப் போக்கும். சாதுசங்கமோவென்றால், இவ்வெல்லாவற்றையும் போக்கும். ஆகையால், சாதுவானதாங்கள், யெங்களுடன் இந்த இடத்திலேயே வசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். கேதாரஷியும், அதற்கிசைந்து ரிஷிகளோடு இவரும்தவம்புரிந்து, தன்னுடைய சரீரத்தை மறந்து, அஷ்டாங்கயோகத்தில் இருந்து பிராணாயாமம்புரிந்து, சதாகாலம் ஈசனை நினைந்து தபசு

செய்துவந்தார். இப்படி இருக்க ஒரு நாள், ஆகாயவாணி யென்னும் அசரீரீவாக்கானது கெம்பீரமாகக் கேதாரரிஷிக்கி கேட்கப்பட்டது. அதாவது ஓ மகானுபாவா! இவ்விடத்தில் பிர்மமா முதலியவர்களால், பூஜிக்கப்பட்டதும். இப்போதுவா ல்மீகம்யென்னும் புற்றினால மறைக்கப்பட்டதும். ஸ்வயம்பூ யென்றும் பேர்பெற்றதும். பக்தர்களுக்கு, அநுக்கிரகஞ் செய்ய கைலங்கிரியினின்றும் தானாய் அவதரித்த, ஒருலிங் கமானது, இவ்விடத்தில் பிர்மமாவால் பூஜிக்கப்பட்டு, இப் போது மறைந்திருக்கிறது. நீ சிவபக்தனானகையாலும், உன் னால் இந்த க்ஷேத்திரமகிமை வெளிப்படவேண்டி உன்மகிமை யையும், சிவபிரானுடைய பெருமையையும், இவ்வுலகில்பல ரும் அறியச்சொல்லுகிறேன். கிருதயுகத்தில் புன்னாகமரமெ ன்றும் திரேதாயுகத்தில் பில்வமரமென்றும் துவாபரயுகத்தில் பலாச விருக்ஷமென்றும், கலியுகத்தில் குருவிந்தமென்றும் பேர்பெற்ற இம்மரத்தடியிலிருக்கும் புற்றைவெட்டி சோதித் தால், அதிலுள்ளபுல்பூண்டு முதலிய அசேதனங்களுக்குமசே தனங்களாகிற மிருகாதிகளுக்கும் ஞானம், அக்கியானம், பாவ புண்ணியம் முதலிய பகுத்தறிவுடைய மனிதர்களுக்கும், முக் திபிரதமாயும், சகலசித்திபிரதமாயும், பாண்டியராஜன் பிர்ம் மசாபத்தால் யானையாய்பிறந்து பூர்வஞானமவந்து இத்தலத் தையடைந்து சிவபிரானைப் பூஜைபுரிந்து அஸ்தீஸ்வரர்யென் னுந்தன் பெயரைத்தன்னுடைய பேருக்குத்தக்கபடி கொடுத்து முக்திபெற்று பரமபதமடைந்தபடியால அந்த யானையானது கொடுத்த பேரானது அத்தியென்று மிந்த க்ஷேத்திரத்திற்கு யேற்பட்டது பிறகு வியாக்கிரபாதர் யென்னும் மகாரிஷியா னவர், இவ்விலிங்கத்தைத் தெரிசித்து பரமசிவனைப்பூஜித்துத் தன்னுடைய பேரை இவ்விலிங்கத்திற்கு கொடுத்த வியாக்கி ரேசுவரர் யென்றும் பேரளித்துத தனதிஷ்டமான விடஞ்செ ன்றார் வியாக்கிரத்திற்கு புலியென்று தமிழில் பேர்விளங்குவ தால் (அத்திப்புலி, யென்று பெயர் கிடைத்தது ஆகையால் தாம் இந்த வல்மிகத்தைச்சோதித்து லிங்கத்தைத் தரிசித்துக் கேதாரர் என்னும உம்முடைய பேரையும் ஸ்தாபனம செய்யு மென்று ஆகாசவாக்குச் சொல்லிற்று அப்பால் கேதாரரிஷியா

னவர் ஆகாசவாக்கின்படித் தியானஞ் செய்துக்கொண்டு ரிஷிக ளுடன் சென்று வல்மீகத்தை வெட்டி ஸ்வயம்புலிங்கத்தைக்கி ட்டிப் பேராநந்தம் முட்டி சிவபெருமானைப் பூஜித்துத் தன் பேராகிய கேதாரேசுவரர் என்னும் நாமத்தைக்கொடுத்து வெகு நாள் தரிசித்துத் தனதிச்சைப்படி சென்றார். ஓ சௌன காதிரிஷிகளே! ஜீவன் முக்திபிரதமான காசிக்ஷேத்திரத்திற்கு 200 யோஜனை வாயுமூலையிலிருக்கும் உத்திரகேதாரமென்னும் க்ஷேத்திரத்தில் பார்வதி தேவியானவள் கௌதமருடைய உப தேசத்தால் சிவபெருமானைப்பூஜித்து ஈசனருளால் சிவபிரானுக் குப்பாதி சரீரத்துடன் அர்த்தநாரீஸ்வரர் என்னும் பேரும்பெற் றார்; ஆகையால் அவ்வுத்திரகேதாரத்திற்குச் சமானமான இத் தெக்ஷிண கேதாரமானது மகாபாவங்களைத் தீர்க்கத்தக்கதாயும் ரிஷிகளுக்குத் தபசுக்குப்பலனைக் கொடுக்க உற்பத்தியானதா யும் இக்ஷேத்திரத்தில் அணுமாத்திரம் செய்த புண்ணியமனந் தங்கோடி பலபிரதமாயும் உபவாசஞ் செய்பவர்களுக்கு முக்தி கொடுக்கத்தக்கதாயும் ஒரு ராத்திரி வசித்தால் கோடியக்கின பலனும் கிடைக்கு மாகையால் ஓ முனிசிரேஷ்டர்களே! இத் தலத்தின் மகிமையையும் பூஜித்தவர்களின் பெருமையையும் விஸ்தாரமாகச்சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதபுராணி கர் சௌனகாதிரிஷிகளுக்குச்சொல்லி வருகிறார்.

பவிஷிய உத்தாபுராணத்தின் க்ஷேத்திர வைபவகாண்டத் தில் புன்னாகவனமகிமையில் க்ஷேத்திர உற்பத்திஎன்னும் நூறா வது அத்தியாயம் முற்றிற்று.

## தக்ஷிணகேதார மகாத்மியம் நூத்திஓருவது அத்தியாயம்.

சௌனகாதிரிஷிகள் சூதபுராணிகரை வணங்கி, ஓ! புரா ணோத்தமா! தண்டகாரண்ய மத்தியில்கேதார சரிதம் யென் றும், அஃதிசரித்திரம் யென்றும், வியாக்கிரபுரி யென்றும், பேர்பெற்ற ஸ்தலத்தின் மகிமைகளையும் தீர்த்தங்களின் பிரதா பங்களையும், முக்திபெற்றவர்களின் சரித்திரங்களையும் கேட்க ஆவலாயிருப்பதால் விஸ்தாரமாக அருளிச்செய்ய வேண்டு மென்று பிரார்த்திக்க, சர்வக்கியராயும், வியாசபகவானுடைய

அனுக்கிரகத்தால் சகலபுராணங்களையுஞ் சொல்லவல்லவரான சூதர் சொல்லஆரம்பித்தார். ஓ சௌனகரே! தங்களுக்குச்சமன் இப்பூமியில் ஒருவருமில்லை, தாங்களறியாத பொருளும் க்ஷேத்திரமுமில்லை, ஆகிலும் யென்னை யொரு பொருளாக நினைத்துக் கேட்டபடியால் தெரிந்தமட்டிலும் தங்களுடைய சன்னிதானமகிமையினாலும் அனேக புராண பார்வைகளினாலும் யெனது குருவாகிய வியாசருடைய அனுக்கிறகத்தினாலும் இம் மகிமையைக்கேட்கத்தாங்கள் ஆவலுடையவர்களா யிருப்பதாலுந் தெரிந்தமட்டில்சங்கிரகமாகச் சொல்லுகிறேன், கேளுங்களென்று சொல்லத்தொடங்கினர். கேளீர் சௌனகர்களே! பிரிதிவிலிங்கமென்றும், வல்மீகலிங்கமென்றும், அத்தேசத்தில் ஜனித்தவர்களுக்கு முக்தியென்றும், அவ்விடத்தில் பக்தி செய்பவர் முக்தி அடைவார்கள் இது சத்தியமென்று பிரசித்தமான (திருவாரூர்) யென்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்கு ஆக்கினேயதிக்கில் முக்கால் யோசனை தூரத்திலும், ஸ்ரீ தேவ புராதர் யென்றும் பெயர்பெற்று அதனுல் தேவூர் யென்று பிரசித்தமான க்ஷேத்திரத்திற்கு வாயுமூலையில் அரையோசனை தூரத்திலும் புன்னுகவனம் என்றுபேர்பெற்று இவ்வுலகில் பிரசித்திபெற்று மரச்சோலையினாலும் பக்ஷிக்கூட்டங்களாலும் மூடப்பட்டு பிர்ம்மாவினுல் பூஜிக்கப்பட்டு முக்தி பிரதமாகிய இக்ஷேத்திரமானது ஆதி பிர்ம்ம கல்பத்தில் பிர்மாவின் பிரார்த்தனையின் பேரில் ஸ்வயமாய் வெளிப்பட்டு அநேக பிரமதகணங்கள் புடைசூழவும், கந்தர்வாள்கானம் பாடவும், அப்சரஸ்திரீகள் நின்ருடவும், உமாதேவியும் வந்து கூடவும், தேவதைகள் நடமாடவும், பிர்ம்மாவானவர்பார்த்து மனதுருகி வாடவும், உற்பவித்த சுயம்புலிங்கத்தைப்பிர்ம்மாவானவர் சேவித்து உமாதேவியுடன் பூஜித்துப்புஷ்பங்களால் அர்ச்சித்து விசுவகர்மாவை வரவழைத்து பிர்மேசுவரியென்னும் பிம்பத்தைச்சிருஷ்டித்து அர்த்தமண்டபம மகாமண்டபம், யாகசாலை, பாகசாலை, கீதசாலை, முதலியதும், விநாயகர், ஷண்முகர், பைரவர், சூரியன், முதலிய மூர்த்திகளைச்சாஸ்திரப்படி ஸ்தாபனஞ்செய்து சன்னதியில்புஷ்கரணிவெட்டி அதில்கெங்கை முதலிய சகலதீர்த்தங்களையும்

அதில் வரவழைத்துக்கட்டி ஆலயத்திற்குத் தென்புரத்தில் கிட்டிதாண்டவ மூர்த்தியாகியநடராஜர், சோமாஸ்கந்தர், அர்த்த நாரிஸ்வரர் முதலிய உத்ஸவமூர்த்திகளையும் ஸ்தாபித்து அம் மூர்த்திகளுக்குச் சகல ஆபரணங்களையும் வார்ப்பித்து ஆபர ணங்களைப் பூட்டித்தன் பேரை நிலைநாட்டி ரதத்தை உற்பத்தி செய்து ஓட்டிசகல தேவர்களையுங் கூட்டிசத்தியலோகமடைந் தார் (பிர்ம்மா). ஆகையால் பிர்ம க்ஷேத்திரமென்றும் பெயர் பெற்று வருவதாயும் பிர்ம ஹத்திமுதலிய பாபத்தைப்போக் கடிப்பதாயுமிருக்கிற இக்ஷேத்திரத்தில் வசிஷ்டாதிரிஷிகளும், வியாசாதிமுனிவர்களும், ஜனகாதியோகிகளும், தேவரிஷிகளும், நாரதர்முதலிய மகாத்மாக்களும், யக்ஷாள், கின்னராள், கிம்புரு ஷாள், உரகாள், பதகாள், சித்தாள், சாத்தியாள், சாரணுள், முத லிய சகலராலும்சேவிக்கபட்டதுந் தரிசனமாத்திரத்தில் சகல பாபங்களையும் போக்கடிக்கக்கூடியதான இக்ஷேத்திரத்தில் சுவா ரோசிஷமனுவானவர் இத்தலத்தில் தவம்புரிந்து பிர்ம புரீஸ்வர ருடைய அனுக்கிறகத்தால் மனுப்பட்டமடைந்தார். விசுவாமித் திர மகாரிஷியானவர் வதிஷ்டரிஷியுடன் விரோதித்து இத்தல த்தில் தவம்புரிந்து பிர்ம்மரிஷி யென்றும் பேர்பெற்ருர். நாரத மகாமுனியானவர் இவ்விடத்தில் தவம்புரிந்து பரமசிவனனுக் கிறகத்தால் கான வித்தையையும் அதற்குச்சாதனமான வீணை யையும் அடைந்தார். சூரியபகவான் பூஜித்து பிர்மபுரீஸ்வரர் கிருபையால் அறுபதினுயிரங்கோடி மந்தேகாள் யென்னும் அசு ர்களை பிரதிதினம் நாசஞ்செய்ய மந்திரத்தையும் பலத்தையு மடைந்தார். ஆகையால் இப்புன்னுக மரத்தின் அடியில் வசித்த வர்களுக்கும் தவம்புரிந்தவர்களுக்கும் மனோபீஷ்டங்களும் முடி யக்கூடாத காரியங்களும் கைகூடுமென்பதற்குச்சந்தேகமில்லை. மேலும் ஞானமில்லாதவர் தானஞ்செய்யாதவர் கர்மானுஷ்டா னத்தைவிட்டவர் மகாபாபங்களைச்செய்தவர் இவர்கள் இக்ஷேத் திரத்தில் வந்தமாத்திரத்தில் முக்தி அடைகிருர்கள், பின்னும் இக்ஷேத்திரவாசத்தால் சாயுச்சியத்தையும், அன்னியக்ஷேத்தி ரத்தில் செய்யுந்தானங்கள் இக்ஷேத்திரத்தில் செய்தால் கோடி பங்குபலத்தையும், ஒருபுஷ்பம் லிங்கத்திற்கு அர்ச்சித்தால்

அமோகபலனும், அன்னதானமும் பயிரோடு பூமிதானமும் செய்தவர்கள் பதிநுயிரம் வருஷம் சிவலோகத்தில் வசித்து முடிவில் சாயுச்சியபதவியும், சம்பகம், அசோகம், மல்லிகை முதலிய புஷ்பங்களால் மாலைகட்டி லிங்கத்திற்கு சாத்தியும் பட்டுமுதலிய வஸ்ரதிங்களால் அலங்காரஞ்செய்தும் தூபம் தீபம், கர்ப்பூரமுதலிய சோடச உபசாரஞ்செய்தவன் ராஜ பிறப்பையும் அடைவான். முற்காலத்தில ஒரு யானையானது புஷ்பசேவை செய்து சாபம்நீங்கித் திவ்விய ரூபத்தையடைந்து புஷ்பவனமும் யேற்படுத்தினபடியால் அத்தியாபி புஷ்பத்தோட்டங்கள் விஸ்தாரமாக இருக்கிறது. சன்னதியிலிருக்கும் பிர்மகுண்டமென்னும் தீர்த்தத்தில் உற்பத்தியாகிற தாமரை புஷ்பத்தை யெடுத்து மாலைதொடுத்து பரமசிவனுக்குக்கொடுத்து பூசித்தவன் தேவரூபமடைந்து பிறகு முக்தி அடைவான்.

இந்த ரகசியமான அத்தியாயத்தைப் பக்தியில்லாதவர்களுக்கும் சிரத்தை யில்லாதவர்களுக்கும் உபதேசிக்கக் கூடாது; சிஷியனுக்கும் புத்திரனுக்கும் சிவபக்தர்களுக்கும் உபதேசம் பண்ணலாமென்று சூதபுராணிகர் நைமிசாரண்ய ரிஷிகளுக்கு உபதேசித்து வந்த பவிஷிய உத்திரபுராணத்தில் க்ஷேத்திரவைபவகாண்டத்தில் தக்ஷிணகேதாரமகாத்மிய மென்னும் நூத்திரெண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

யானைக்கு பிர்மசாபவிமோசன மருளப்பட்ட 102-வது அத்தியாயம்.

சூதபுராணிகரைப்பார்த்து சௌனகர்ப்பிரசினம் பண்ணுகிறார். ஓ சூதபுராணிகரே! யானையானது இந்தலத்தில் பூசித்து முக்திபெற்றதாய்ச் சொல்லப்பட்டதே, யானைக்கு எப்படிசாபம் நேர்ந்தது; எதனுல் நிவர்த்தியாயிற்று; அவைகளை விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க, சூதபுராணிகர் சொல்லலுற்றுர். கேட்டீரோ சௌனகரே நீர்வளம் நிலவளம் பொருந்தியும் பரமசிவனுக்கு வாசஸ்தானமாகியும், அவாதசாந்த ஸ்தலமென்றும் பேர்பெற்ற பாண்டியநாட்டில் கேசரித்துவஜன் யென்றும் பேர்பெற்ற ஓர் அரசன் மநுநீதிதவராமலும் ஆசாரமுடையவனுயும், சந்திவிக்கிரகம், யானம், ஆசனம், அவைதம் ஆசிரீதம் என்றுசொல்லப்பட்ட குணங்களோடும் தேவதைகள்,

பிராமணுள் இவர்களைப் பூசிப்பவனுயும், அக்கினிஹோத்திரம் முதலிய அனுஷ்டானங்களும், நித்தியதானம் செய்பவனுயும் பந்துஜனரக்ஷகனுயும், புத்தியில் பிரகஸ்பதிக்குச் சமனுகவும் பொறுமையில் பூமிக்குச் சமானமானவனுகவும், யெஜஸில் இந்திரனுக்குச் சமானமானவனுயும் தனத்தில் குபேரதுல்லியனுயும், யாகம், தவம, தானம் முதலியதுசெய்துநல்லபுத்திரனே அடைந்து யாதொரு குறைவுமன்னியில் மன்னுயிர்களைத்தன்னுயிர்போல் காப்பாற்றிக்கொண்டு மூவாயிரம் வருஷம் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். ஒருசமயம் அவ்வரசன் வசந்தோத்ஸவம் செய்து முடித்து கிரீடகுண்டல முதலான ஆபரணங்களணிந்து பரமசிவனேப்பணிந்து, உத்தியான வனத்தையடைந்து, பரிவாரங்களுடன் சிம்மாசனத்தில் இருந்து மந்திரி பிரதானி சேனுதிபதி படைத்தலைவர் அணித்தலைவர் தாசிதாசார் முதலிய பரிவாரங்களுக்குப் பரிசு கொடுத்து ஸகலருக்கும் உத்திரவு கொடுத்து ஜலக்கிரீடைசெய்ய நினைத்து திவ்ய சரசை அடுத்து நித்தியகர்மத்தை முடித்து அநேகஸ்திரீஜனங்கள் புடைசூழ ஸகலரும் மனமகிழ ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். அத்தருணத்தில் ராஜாவினுடைய ஜன்மாந்திர கர்மவசத்தால் மாண்டவியர் என்னும் முனியானவர் பசியால் வருத்தப்பட்டு ராஜாவின் எஸஸைக்கேள்விப்பட்டு ஆசாரவாசவில்வந்து அரசனேக்காணுமல் நொந்துத் தன்னே விசாரிக்க ஒருவருமில்லையென்று தெரிந்து கோபத்தால் கண்சிவந்து இரண்டு நாழிகைவரையிலிருந்து ராஜாவிருக்கும் நிலைமையைத் தெரிந்து ராஜனேச்சபிக்க நினைத்தார். ஒ கேசரித்துவஜனே என்னேக்கண்டு என்னுடைய பசியைவிண்டு என் ஆசீர்வாதத்தைக்கொண்டு சுகத்திலிருப்பதை விண்டு, கெர்வங்கொண்டு, ஸ்திரீலோலனுய் அதிபாவியனுயிருப்பதால் உன்னேச்சபிப்பேன் என்னும் கோபத்தை கண்ட வாசர்கார்ப்பான் அதிவேகமாய்ச் சென்று ராஜனேக்கண்டு பணிந்து நின்று மாண்டவியமகாமுனியின் கோபத்தைத் தெரிவிக்க ராஜன் திடுக்கிட்டு சரசைவிட்டு வெளிப்பட்டு ஓடோடியும் வந்து பாதம்பணிந்து ஸ்தோத்திரம் புரிந்து பிரார்த்தித்தான். அதுகண்ட முனியானவர் சபனமடை

ந்து ஓ அரசனே! நீ செய்த உபசாரத்தால் மனந்தணிந்தேன் அரசர்கள் பகலில் வெளியில் வந்து ரிஷிகள், முனிகள், சன்னியாசிகள், பிர்ம்மசாரிகள் இவர்களுக்கு அதிதி பூஜைசெய்து உபசரித்து அவரவர்கள் வேண்டியதைக் கொடுத்து உபசரிக்காமல் மத்தனாய் மெய்மறந்து ஜலக்கிரீடையிலிருந்து ஸ்திரீகளோடு கலந்து இருந்தபடியால் நீ மதம்பட்ட யானையாய்ப் பிறந்து யானைப்பேடுகளுடன் கலந்து தேசமெங்குந் திரிந்து வனம் வனுந்திரங்களைக் கடந்து உபயகாவேரி மத்தியில் இருக்கும் ஜம்புகேஸ்வரம் யென்னும் க்ஷேத்திரத்தையடைந்து அவ்விடத்தில் நாரதரிடம் உபதேசம் பெற்று பாபவினையற்று அந்தமகானுபாவர் சொல்லியபடிநடந்தால் முக்தியடைவாயென்று சாபம் கொடுத்து தனதிஷ்டப்படி சென்றுர். ராஜாவானவன் முனிசாபத்தால் தன்னுடன் இருந்த ஸ்திரீகளுடன் யானையாய்ப்பிறந்து உலகெங்குந்திரிந்து பனிரெண்டு ஆண்டும் மறந்து திருவானைக் காவலென்னும் க்ஷேத்திரத்தைக் கண்டு சந்தோஷங் கொண்டு மாண்டவ்யருடைய சாபநிவர்த்திகாலம் வந்ததென்று நாரதர் வரவைக்கண்டு எதிர்கொண்டு சென்று துதிக்கையைத் தூக்கி மனதை நாரதர் பாதத்தில்தாக்கி யெதிர் நின்று நோக்கி நிற்கக் கண்ட நாரதரானவர் அருள் புரிந்து மாண்டவ்யர் சாபத்தால் வந்ததைத் தெரிந்து ஈசனடியைப்பணிந்து பஞ்சாக்ஷரஜெபத்தைப்புரிந்து யானையைப்பார்த்துச் சொல்லுகிறுர். ஓ பாண்டிய பூபதியே! புண்ணியநிதியே! மாண்டவ்யமுனிவரின் சாபத்தை நிவர்த்திசெய்துகொள்ள சிவபிரானுடைய கடாக்ஷத்தாலன்றி வேறு எவ்விதத்தாலும் முடியாதாகையால் காவேரியாற்றுக்கு இறண்டுயோசனைத் தெற்கே மகாபாதகங்களையும் போக்கும் பாபிகளைப் பரிசுத்தமாக்கும் சாபத்தை நீக்கும் திருவாரூர்க்கு ஆக்கினேய திக்கில் முக்கால் யோசனை தூரத்திலும் தேவபுரமென்னும் தேவூருக்கு வாயுமூலையில் அரையோசனை தூரத்திலும் பஞ்சகமென்னுந் தீர்த்தங்களுடன் பரமசிவன் எழுந்தருளி பிர்மாவால் பூஜிக்கப்பட்ட புன்னுகவனமென்னும் க்ஷேத்திரஞ் சென்று யானைப்பேடுகளுடன் திவ்யமான தாமரை முதலிய புஷ்பங்களால் ஒருவருஷம் பூஜித்தால் சிவனருள்பெற்று பிர்ம்

மசாபமற்று திவ்ய விமானத்தில் ஏறிச் சிவலோகமடைவாய் ஆனால் நீ மதோன்மத்தனாய்ப் பிருமண அபராதஞ்செய்தபடி யால் உனக்கு விமோஜனங்கிடையாது. மாண்டவ்யமகாமுனி பிரதிசாபம் கொடுத்து பன்னிரண்டுங் கழித்து இக்ஷேத்திர த்தில் என்னை தெரிசித்து முக்தியடைவாயென்று சொன்னபடி யால் அவ்வாக்கியத்தின்படியே சாபவிமோசனமார்க்கஞ் சொன் னேன். சிவபிரானுக்குச் சமானமான மாண்டவ்யருக்கு அபரா தஞ் செய்தவன் யார்தான் முக்தியடைவன்; நீ பண்ணின புண் ணியவசத்தால் மருசாபங் கொடுத்தார், மகாமுனியினுடைய தரிசினத்தாலும் புண்ணியவசத்தாலும நீ செய்ததவத்தினாலும் முக்தியடைகுவாய், ஆகிலும் பரமசிவனும் பிருமணரைப் பூஜிக் கிறார், பிராமணர்களின் முகத்தில் வேதமிருப்பதாலும் வேதம் ஈஸ்வரரூபமானதினாலும் ஈஸ்வரன் வாயுரூபமானதினாலும் வாயு பிராமணரூபமானதினாலும் உலகத்தில் பிராணனுக்குக்காரணம் முதல், பிராமணராகையால் நீ புன்னாகவனம் சென்று சிவனரு ளால் முக்திபெறுவாய், பிறகு வியாக்கிரபாதர் அந்தக்ஷேத்திரம் வந்து லிங்கரூபமான கடவுளைப் பூஜிக்கப்போகிறார் ஆகையால் நீ சீக்கிரம் போகவேண்டு மென்றருளி நாரதர் கையில் வீணை யைப்பிடித்துக் கானத்தைத் தொடுத்து யானையை விடுத்துத் தன்கருத்துக்கிச்சையானபடி சென்றார்.

ஓசௌனகரே! இச்சரித்திரம் முக்திபிரதமாயும் யானைக்கு உபதேசம் செய்ததாயும் பக்திரசத்தை சித்தி செய்யும் இத் தந்திசரித்திரமானதுபவிஷிய, உத்திரபுராணம்க்ஷேத்திரவைபவ காண்டம் யானைக்குப்பிர்ம்மசாபவிமோசன மருளப்பட்டதென் கிற நூத்திரெண்டாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

## யானைக்கு முக்திகோடுத்தது. 103-வதுஅத்தியாயம்.

இவ்வண்ணம் சாபத்தால் யானையாயிருந்த அரசன் மாண் டவ்ய மகாமுனியி னனுக்கிறகத்தால் நாரத மகாமுனியைக் கண்டு அவரருளிச்செய்தபடி அவ்விடம்விட்டுப் புறப்பட்டு தேசமெங்குஞ் சுற்றிப் பிர்ம்ம புரத்தைப்பற்றி யெங்குஞ் சுற்றி

குருவிந்த வனம் சென்று ஆச்சரியங் கொண்டு வேகமாய்ச் சென்று யானைப்பேடுகளுடன் சன்னதியிலிருக்கும் பிர்ம்மதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து நிர்மலமூர்த்தியான பரமசிவஸ்வரூபம் விளங்கும் லிங்கத்தைக் காணுமலொன்றும் தோன்ருமல் மரங்களினுலும் முட்களினுலும் மூடப்பட்டிருக்கும் இடிந்தகோவிலைக் கண்டுமனம் விண்டுதன் பலத்தைக்கொண்டு காடுகளை அழித்து யெங்கும்வெட்டிப்பிரித்து சோதித்து கல்பந்தோறும் பிர்ம்மாவினுல் பூஜிக்கப்பட்டலிங்கத்தைப்பார்த்து மனங்களித்து சந்தோஷமடைந்து யானைப்பேடுகளோடு பிரதக்ஷிண நமஸ்காரம் புரிந்து சுண்டமென்னும் துதிக்கையைத்தூக்கி லிங்கரூபியான பரமசிவனைநோக்கி மனதை சிவனடியில்தாக்கி மனதிலிருக்கும் துக்கங்களைப்போக்கி மாண்டவ்யருடைய சாபத்தையெண்ணி மனங்குண்ணிப்பக்தி பண்ணிபூஜைசெய்து சன்னதியிலிருக்கும் பிர்மமதீர்த்தத்தில் பிரதிதினம் ஸ்நானம்பண்ணி அதிலிருக்கும் தாமரைபுஷ்பங்களைப் பிரதிதினம் நூத்தியெட்டு யெடுத்துவந்து சிவனுக்கு அர்ச்சித்து ஸ்தோத்திரங்களால் கொச்சித்து ஆகாரங்களை விரசித்து ஒருவருஷம்பூஜை செய்துவந்தது. இப்படிச் செய்துவந்த பூஜையின் மகிமையினுலும் பக்தியின் உருக்கத்தினுலும் பரமசிவன் கிருபைகூர்ந்து ஒரு வருஷஞ் சென்றபிறகு மற்ற கெஜங்களுடன் விளங்கும்அத்திராஜனுக்கு முக்திகொடுக்கப்பக்தகோடிகளுடன் விருஷபவாகனமேலேறி நந்தி பிருங்கி முதலிய பிரமதகணங்கள் புடைசூழ தந்திமுகத்தோன் கண்டு கொண்டாட முந்திவரும் தேவர்கள் மனமகிழ அண்டையிலிருக்கும் பார்வதியம்மனும் புகழ, பேரி, மிருதங்கம், மத்தளம், தாளம், காகளம், தும்புரு, வீணுவேணு, நூபுரம், மட்டுகம், டிண்டிமம், சர்ச்சரம், தவளச்சங்கம், பணவம், படகம், டமருகம், தூரியம், என்னும் பதினெட்டு வாத்தியங்களும் ஒலிக்க யானைரூபமான அரசன் கண்டு மனங்களிக்க யானைப்பேடுகள் கண்டு மனம்கொக்கரிக்கப் பக்தனுக்குவரமளிக்க லிங்கத்தினின்றும் வெளிப்பட்டுவரும் லோகநாதனைக்கண்டு ஆனந்தங்கொண்டு யானைஉருவம்நீங்கி ஆனந்தபாஷ்பம்பொங்கி சிவலோகத்திலிருந்து வந்த கோடிசூரியப்பிரகாசமான விமானத்தைக்கண்டு

அடிபணிந்து நின்று அநேக கோடிசூரியன் உதித்ததுபோலும் பிரகாசமும் சந்திரசமுகத்திற்கு நிகரான குளிர்ச்சியும் பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வதில் மகிழ்ச்சியும் மிகப்புகழ்ச்சியுமுள்ளபாதங்களைக்கண்டுபணிந்து, ஓ ஜனார்த்தனா! தங்களுடைய மகிமையையும் அருமையையும் பெருமையையும் சொல்லயார் வல்லவர்? திரியக்ஜாதியான யானைக்கு, பிராமணசாபத்தை நீக்கி முக்தியளித்த தயாநிதியே! கயிலாசபதியே! நான் ஒருவரங்கேட்கின்றேன், அவ்வண்ணமருளவேண்டும்; அதுயாதெனில், இந்தப் படியெனக்கு முக்திகொடுத்தபடியால் என்பேராகிய அத்தியென்னும் நாமதேயம் இவ் விங்கத்திற்கு அருள்புரியவேண்டுமென்று பிரார்த்திக்க, பக்தன் கோருகிறபிரகார மிசைந்து மனமகிழ்ந்து அவ் விங்கத்திற்கும் அவ்வூருக்கும் அத்தி யென்றும் பெயர்கொடுத்து அந்தரத்தியானமானார். ஓ சௌனகாதிரிஷிகளே! கேட்டீர்களோ உலகமெங்கும் பிரசித்திபெற்ற ஆகாசலிங்கம் ரூபியாய் விளங்கும் ஹிருதபுண்டரீகமென்னும் க்ஷேத்திரத்தில் பிரதி தினம் நிர்த்தனதரிசனஞ்செய்துவசித்துக்கொண்டிருக்கும்வியாக்கிரபாத மகானுபாவரானவர் தீர்த்தயாத்திரை செய்யப்புறப்பட்டு சிதம்பரத்தைவிட்டு அநேகங்கோடிஸ்தலங்களைத்தரிசித்து அத்தி யென்னும்யானையால் உஜ்ஜீவிக்கப்பட்ட க்ஷேத்திரத்தைக் கண்டு மனமகிழ்ந்து பாபம் நீங்கி தேவரூபமடைந்து இருவரும் அரசனைக்கண்டு ஞானமில்லாத திரியக்ஜாதியான யானைக்குக் கூடதேவரூபங்கொடுத்து க்ஷேத்திரத்தின் மகிமையைதெரிந்து பக்திபுரிந்து கடவுளுடைய மகிமயைநினைந்து மனமகிழ்ந்து ஸ்தலத்தின் மகிமையை மனதிலெண்ணிப் பக்திபண்ணி ஈஸ்வரனைப்பூசைபண்ணி பஞ்சாக்ஷரத்தை ஜெபித்து மனம்பூரித்து கிருபாமூர்த்தியான சூலபாணியினுடைய மகிமையைஸ்துதித்து மனம்பூரித்து இப்புண்ணியகோடி க்ஷேத்திரத்தில்ஒருவருஷம் வசிக்கநினைத்து புந்நாகவனநாதருடைய சன்னதியில்வந்திருந்தார். பின்பு கோவிலுக்கு மேற்புரத்தில் தன்னுமதேயமான வியாக்கிரேஸ்வரர் என்னும் பெயர்வகித்து சதுர்ச்சிரமாயும் தாமரை ஆம்பல் முதலிய புஷ்பங்களோடு கூடினதாயும் அழகான படித்துறைகள் கட்டப்பட்டதாயும் தீர்த்தத்தை சிருஷ்

டித்துக் கங்கைமுதலிய தீர்த்தங்களை வரவழைத்து அதில் ஸ்நானம்செய்து மற்றும்யார் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம்செய் தாலும் மகா பாதகங்களைப்போக்க அனுக்கிரகித்தும் தேவகோ டிகளுடனும் சிஷ்யகோடிகளுடனும் வசித்துவந்தார். இப்பால் தேவரூபத்தையடைந்த அரசன் வியாக்கிரபாதரைப் பணிந்து மாண்டவரிஷியின் வாக்கியத்தை நினைந்து ஆண்டவனே என்று ஸ்தோத்திரம் புரிந்து பலவிதமாய் வேண்டி முக்திப்பிரதமான பஞ்சாக்ஷரத்தை சித்திபெறும்படி அனுக்கிரகம் செய்யவேண்டி சொல்லுகிறூர். ஓ மகானுபாவா! இவ்வுலகில் பஞ்சாக்ஷர ஜெப மில்லாதவருக்குப் பக்தி, முக்தி, சித்தி, உண்டாகாதாகையால் நான் கடைத்தேற சித்திபெறும்படி அத்தியாயிருந்த எனக்குப் புத்திவரும்படி சக்தி பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தருளவேண்டு மென்று பக்தியுடன் கேட்கும் அரசனைப்பார்த்து வியாக்ரபாதர் மனமகிழ்ந்து கிருபை புரிந்து சிஷ்யனுடைய மனதையறிந்து ருத்திராக்ஷவிபூதிதரித்து பஞ்சாக்ஷரத்தையும்ஜெபித்து சன்னதி யிலிருக்கும் பிர்ம்மதீர்த்தத்திலும் தன்னுல் நிர்மாணம் செய்யப் பட்ட பச்சிம பாகத்திலிருக்கும் வியாக்ரபாத தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்வித்து அகமர்ஷண ஜெபஞ்செய்து புரோக்ஷித்து ஜின்முத்திரை தரித்து காருண்யத்துடனருகிலிருக்கும் செளன காதியோகிகளுக்கு ஞான உபதேசஞ்செய்கிற தக்ஷிணமூர் த்தி சன்னதியில் வரவழைத்து சாங்கமாயும் ரகசியமாயும் அங் கநியாதிகளுடன் பிரணவப்புரச்சரமாய் பஞ்சாக்ஷரமந்திரத்தை உபதேசித்து அப்பஞ்சாக்ஷரத்தில் சிதம்பர ரகசியங்களையும் உபதேசம்பண்ணி அனுக்கிரகம் செய்தார். ராஜாவானவர் அம் மந்திரத்தை ஜெபம்செய்து ஆலயத்திற்கு வடபுரத்தில் சரசு வெட்டி தன்பெயராகிய கெஜதீர்த்தமென பேர்கொடுத்து அத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர் மகாபாதகங்களினின்றும் விடு படுவார்களென்று அனுக்கிரகித்து அவ்விடத்திலேயே தபசு செய்துவந்தார். வியாக்கிரபாத ரிஷியானவர் தன் தீர்த்தத்திற்கு மேல்புரத்தில் லிங்கஸ்தாபனம் செய்து ஆண்டொன்று வசித்து தாண்டவ மூர்த்தியைத் தெரிசித்திருக்கும் காலத்தில் கைலாச பர்வதத்திலிருந்து பூபாரத்தைச் சமனுக்க விந்தியபர்வதத்தை

அடக்கி தெக்ஷிணத்தை நோக்கி மனதை சிவங்கால் தாக்கி ஐம்புலனை அடக்கி இவ்வண்ண வாதாபியைப் பஸ்மமாக்கி கலியாண கோலத்துடன் ஈஸ்வரனைப்பார்க்க சரீரம்வேர்க்க வரும் கும்பசம்பவரைக் கண்டு அவருடைய தெரிசனத்தால் மனம் பூரித்து கலியாணகோலத்தைத் தெரிசித்து அகஸ்தியருடன் புறப்பட்டு தனதிஷ்டப்படிச் சென்றார். சாபத்தில் நின்றும் விடுபட்ட ராஜாவும் பஞ்சாக்ஷர மகிமையினால் பஞ்சலெக்ஷணம் பொருந்திய மஹா மந்திரத்தை அஞ்சு லெக்ஷம் ஜெபித்து தன் பெயருள்ள தீர்த்தக்கரையில் அஸ்திலிங்கமென்றும் ஓர் லிங்கஸ்தாபனம்பண்ணி பூஜித்து தாண்டவசன்னதியில் நின்றாடி மனம் வாடி பிரமதகணங்களுடன்கூடி ஸ்வர்க்கலோகத்தைநாடி முக்தியடைந்தார். முந்தி பிர்மாவினால் பூஜிக்கப்பட்ட லிங்கத்தின் வைபவத்தையும் அந்த பூஜையினாலுண்டாகும் மகிமையையும் என்குருவாகிய வியாசபகவானும் தக்ஷிண கேதாரமான இந்த க்ஷேத்திரத்தைக்கொண்டாடியிருக்கிறார். ஆகையால் ஓ சௌனகரே! இந்த க்ஷேத்திரத்தின் மகிமையையும் பெருமையையும் இந்த அத்தியாயத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் ஜீவன் முக்தியடைவார்கள். பின்னும் இக்ஷேத்திரத்தின் மகிமையைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று அருளிச்செய்து வந்த பவிஷிய உத்திரபுராணம் க்ஷேத்திர வைபவகாண்டத்தின் யானைக்கு முக்திகொடுத்ததென்று சொல்லப்பட்ட நூத்திமூன்றுவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

## தக்ஷிணகேதார மகாத்மியமென்னும்
## 104-வது அத்தியாயம்.

---

சூதபுராணிகர் சௌனகாதி ரிஷிகளைப்பார்த்துச் சொல்லிக்கொண்டு வருகிறார் ஓ ரிஷி சிரேஷ்டர்களே! பின்னும் அந்த க்ஷேத்திரத்தில் என்றுமழியாமலிருக்கும் மகிமையைச் சொல்லுகிறேன், கேதாரமுனியானவர் ஆதாரங்கள் ஆறையும்தாண்டி மாதாபிதாக்களை விட்டு தீர்த்தயாத்திரை செய்யப் புரப்பட்டு வந்த இச்சரித்திரத்தைக்கேட்டவர் யாவரும சித்தியுமுக்தியும் பெறுவார்கள். கேதாரரானவர் உத்தரகேதாரமென்னும் க்ஷேத்

திரத்தையடைந்து அர்த்தநாரீஸ்வரரைத் தெரிசித்து அங்கிருக்கும் முனிக்கூட்டங்களைச் சேவித்து பிரதாம்புராகமென்றும், கெடிகாதடம் என்றும், ராமதுளகம் யென்றும் பெயர் விளங்கும் காஷ்மீர கண்டத்திலிருக்கும் க்ஷேத்திரங்களைத் தெரிசித்துப் பரமசிவனை அர்ச்சித்து ஹிமோத்பர்வதத்துக்கு தாழ்வரையில் இருக்கும் பிர்ம்மாச்சிரமஞ் சென்று பிர்ம்மகபாலமென்னும் ஸ்தலத்தில் பிர்ம்மேஸ்வரரைக்கண்டுபுஷ்பபத்திராநதிசென்று அவ்விடத்திலிருக்கும் பத்திராவடத்தைத் தெரிசித்து மனம்பூரித்து பத்ரகாரண்யம் வந்து வசிஷ்டர் ஆசிரமத்தில் புகுந்தும் மனமகிழ்ந்து கபிலரிஷியின் ஆச்சிரமம் வந்து அவ்விடம்விட்டுப் புறப்பட்டு புண்ணியகர்ப்பேஸ்வரம் சென்று சிவபிரானைப் பூஜித்து இரண்ய.கர்ப்பவிபிளம் யென்னும் க்ஷேத்திரமடைந்து பாதாளேஸ்வரரைத் தெரிசித்துப் பத்ராரண்யம் பிப்பலேசம் கிரௌஞ்சபர்வத முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைப்பார்த்து ஸக்திபாணி கடாக்ஷபவனம் கிரிஜாவனம் முதலிய விடங்களையும் பூஜித்து ஜீவன் முக்திப்பிரதானமான காசியென்னும் வாரணாஸிசென்று கதயையும் எப்போதும் உஷ்ணமயமாய்ப் பிரகாசிக்கும் சஜ்ஜரவாலேஸ்வரம் ஓங்கார முதலிய க்ஷேத்திரங்களை ஸ்பரிசித்து திருவேணியென்னும் பிரசித்தமான பிரயாகைசென்று பூப்பிரதக்ஷணவசமாக யமுனை, சோணபத்திரை, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, பினாகி முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து ஸ்ரீபர்வதமென்னும் க்ஷேத்திரமடைந்து காளகஸ்தீஸ்வரம் வந்து திருப்பதியென்னும் ஸ்தலத்தை தெரிசித்து சுப்பிரமண்யரைச் சேவித்து குகபுஷ்கரணியில் ஸ்நானம்செய்து தேவதைகள், பிதுர்க்கள் இவைகளுக்குத் திருப்தி செய்து பிராமண போஜன முதலியதுகள் நடத்தி காஞ்சிபுரம் சென்று வேகவதி தீர்த்தத்திலும், மற்றுமநேக தீர்த்தங்களிலும் ஸ்நானாதிகள் செய்து விரிஞ்சிபுரம், வேதபுரம், திருக்கழுக்குன்றம், அருணாசலம் யென்னும் திருவண்ணாமலை முதலிய விடங்களைக் கடந்து பிறகு கற்கண்டேஸ்வரம், வருணேஸ்வரம், பசுபர்வதம், விருத்தாசலம் முதலிய க்ஷேத்திரங்களையும் ஸ்ரீமுடிணம், சிதம்பரம்,

சீர்காழி, வைத்தினுதபுரம், குத்தாலம், மாயூரம், கோகர்ணம், பாணேஸ்வரம் இந்த க்ஷேத்திரங்களைக் கடந்து பேரளம் என்னும் க்ஷேத்திரத்தில் மூத்தவரான பேரளர் யென்பவர் அவ்விடத்திலேயே தபசுசெய்து அங்கிருக்கும் ரிஷிகளைப்பூஜித்து ஈசனருளால் தனக்கிருக்கவிடமும், நிர்மாணஞ்செய்து தபசு செய்து வந்தார். கேதாரர் என்பவரநேகம் க்ஷேத்திரங்களையும் மகிமைகளையும் பார்த்துத் தன்னிச்சையாய்ப் புன்னுகவனம் வந்துசேர்ந்தார். ஆனுலந்தக் கேதாரர் தெரிசித்த க்ஷேத்திரங்களை நான்சொல்ல வல்லவனல்லவாகிலும் சங்கிரஹமாக தெரிந்தமட்டில் சொல்லிவந்தேன். இந்தஸ்தான அத்தியாயத்தைப் படித்தவர்கள் கேட்டவர்கள் படிக்கும்படி செய்தவர்கள் யாவரும் அந்தந்த க்ஷேத்திரங்களில் சென்ற பலனையுமடைவதுடன் நினைத்தமாத்திரத்தில் ஸகலபாவங்களும் நீங்கும். இந்த க்ஷேத்திரங்களை தெரிசித்தவர்களுடைய மனது, வாக்கு, சரீரம் முதலியதுகளால் செய்த பலன்களினின்றும் நிவர்த்திக்கும் மூன்று ராத்திரி வசித்தவர்களுக்கு ராஜசூயயாகபலமும், ஒருமாசம் வசித்தவர்களுக்கு ஜியோதிஷ்டோமயாக பலனுமுண்டாவது மன்னியி லிந்தக் கேதார சரிதத்தைக்கேட்டவர்கள் பரிசுத்தராவார்கள். கேதாரமுனியானவர் புந்நாகவனத்தின் மகிமையைப் பார்த்து அங்கிருக்கும் முனிகளால் சேவிக்கப்பட்டு அவர்களின் மனதுக்கு உடன்பட்டு கடவுளுக்கு வழிபட்டுத் தபசுசெய்து வந்தார். இப்படியிருக்கையில் கேதாரமுனியானவர் ஒருநாள் ஸ்நானுதிகளை முடித்து அருந்தபசு செய்துகொண்டிருக்கையில் குருமூர்த்தியின் அனுக்கிரகத்தால் ஆகாசவாக்கிற் ஒரு தொனி அவர் காதில் கேட்டது. ஓ கேதாரரே! தயோதனரே! உமக்கெதிரிலிருக்கும் வல்மீகத்தில் நமக்கு முக்கியமானதாயும், எமனுக்குச் சத்துருவானதாயும் பரமசிவனுக்கு ஸ்தானபூதமான ஒரு லிங்கம் இருக்கிறது ஒருசமயமுமழிவில்லாத அந்த லிங்கத்தைக்கண்டு முன் பிர்மாவினுல் பூஜிக்கப்பட்டதும் முக்திப்பிரதமுமான அவ்லிங்கத்தைப்பூஜித்தால் நீர் பண்ணுகிற தபசு சித்திபெற்று நீரும் முக்திபெற்று கிருதார்த்தமடைவீரென்று சொன்ன ஆகாசவாக்கைக்கேட்ட கேதாரரிஷியானவர் ஆதார

பூதமான வேதாந்தசாரஸ்வரூப லிங்கமூர்த்தியைப் பார்த்து அங்கமெல்லாம் வேர்த்து எங்கும் பிரசித்தியாகும்படி மங்கள வாவி ஒன்று வெட்டித் தன்பேரைத் தென்புரத்தில் நாட்டி ஈசனைக்கிட்டி பாசத்தை விலக்கும்படி நேசத்துடனே பூசுரபதியானவர் ஆசையுடனே ஆயிரம்வருஷம் அவ்விடத்திலேயே வசித்துத் தன்பேரைச் சித்திபெர மன்மதனை யெரித்த ஜின்மய மூர்த்தியைத் தென்முகமாக வரப்பிரார்த்தித்துத் தன்பேருள்ள வாவியின் தீர்த்தத்தினு லபிஷேகஞ்செய்ய நாள் ஒன்றுக்கு மூன்றுவேளையும் நூறுகுடம் தீர்த்தத்தால் அர்த்தநாரீஸ்வரரை அபிஷேகஞ்செய்து நிர்த்தனமூர்த்தியானப் பக்தபராதீனரை நித்தியம் ஆயிரநாமத்தால் அர்ச்சித்து தூபம், தீபம், நைவேத்தியம், கர்ப்பூரம், தாம்பூலம், சத்திரம், சாமரம், வியஜன முதலிய சோடஸ உபசாரம்புரிந்து பூஜித்துவருநாளில் நேசத்துடன் பரமேசன் அருள்புரிந்து மும்மூர்த்திக்கு முதல்வரான பரமசிவன் அம்முனிக்குப் பிரத்தியக்ஷமாய் ஒரு வார்த்தைச் சொல்லுகிறார். ஓ கேதாரரே! நீர்பண்ணின பூஜையால் பரிபூரணமநோதருகி உமக்கு வேண்டிய வரமளிக்க வந்தேன் இஷ்டமானதைக் கேளுமென்று சொல்ல முனியானவர் கண்டு ஆனந்தங்கொண்டு அடிபணிந்து மனங்கனிந்து கிருபாநிதி உமாபதேயென்று பிரார்த்தித்து இக்ஷேத்திரமான குக்ஷிவாசமில்லாமல் ரக்ஷித்து அக்ஷயமாக பக்ஷமுடன் அன்புபுரியவேண்டியதுமன்னியில் இக்ஷேத்திரத்திற்கு என்னுடைய பேரையுங் கொடுக்கவேணுமென்றும் எனக்கு மோக்ஷத்தையுமருளவேண்டுமென்று பிரார்த்தித்து எனக்கு வரமளித்த வைசாகபூர்ணிமா தினத்தில் பால், தேன், சர்க்கரை அபிஷேகஞ்செய்தவர்களுக்கு முக்தியையும், தென்புரமுள்ள கேதார தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து லிங்கதெரிசனஞ் செய்தவர்களுக்குச் சாயுச்சியத்தையும், தீர்த்ததரிசனஞ் செய்தவர்களுக்கு பாபங்களைப்போக்கியும் அனுக்கிரகம் செய்வதுமன்னியில் பின்னும் ஒரு வரம் அருளவேண்டும் இப்புவனத்தில் எங்குங்காணப்பட்டதாயும் எனக்கு அருள்புரிந்ததற்கு சாக்ஷியாகவும் இவ்லிங்கதெரிசனஞ் செய்தவர்களுக்கு ஆக்ஷியானபலன் அளிப்பதற்காக மூந்தி பிர்ம்மா

வினுல் பூஜிக்கப்பட்ட கிழக்குமுகமாக இருக்கும் இவ்லிங்கமானது இப்போது எனது தீர்த்தத்துக்கு எதிர்முகமாய்த் தெற்குமுகமாகயிருக்க அருளவேண்டுமென்று பிரார்த்திக்க பக்தனுக்காக முக்திகொடுக்க நினைத்து வரமளித்துத் தெற்குமுகமாயெழுந்தருளினர். அதுமுதல் இக்ஷேத்திரமான தெக்ஷணசந்நியாய் ஆக்ஷிபெற்று மோக்ஷபிரதமாய் விளங்கிவருகிறது. கேதாரரிஷியுமித்தலத்தில் அத்தியால்பூஜித்த ருத்திரமூர்த்தியை பக்தியுடன் பூஜிந்து முக்தியடைந்தார். இந்தக் கேதாரசரித்திரமென்னும் அத்தியாயத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் கேட்பித்தவர்களும் எழுதினவர்களும் ஈஸ்வரபதத்தை யடைவார்கள். ஓ நைமிசாரண்யரே! உலகத்தில் கேதாரம், நைமிசாரண்யம், காசி, அவந்தி, உஜ்ஜினி, சிதம்பரம், வல்மீகம், ஹாலாகியம் தெக்ஷிணமுகமுமுள்ள தெக்ஷிணகேதாரம் இவைமுதலியதுகள் சிவபெருமானுக்கு இருப்பிடமாயும் முக்திப்பிரதமாயுமிருப்பதென்பதற்குச் சந்தேகமில்லை இக்ஷேத்திரத்தில் முன்பு கெருடபகவான் இந்திரிய நிக்கிரகராய்த் தபசுபண்ணி தேவலோகத்திலிருக்கும் அமுர்தத்தையடைந்து தன் தாயாகிய வினதைக்குப் பணிவிடைசெய்யும் வேலையினின்றும்விலக்கி திவ்யபாதமாகியமகாவிஷ்ணுவுக்கு வாகனமாக அடைந்தார் இக்ஷேத்திரத்தில் ஒருமாதம் வசித்தவர்களுக்கு சித்தியையும் முக்தியையும் அத்திலிங்கேஸ்வரர் அருளுவாரென்றும் அருளிவந்தார். யென்றுசொல்லிவந்த பவிஷ்ய உத்தரபுராணத்தின் க்ஷேத்திரவைபவகாண்டத்தில் உபரிபாகத்தின் தக்ஷிணகேதார மகாத்மியமென்னும் நூத்திநான்காவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

கேதாரமகாத்மியத்தில் கெருடசரித்திரமேன்னும்
நூத்திஐந்தாவது அத்தியாயம்.

---

சௌனகரானவர் சூதபுராணிகரைப்பார்த்து ஓ புண்ணிய புருஷரே! எங்களெண்ணப்படி சொல்லும் வல்லமையுள்ள புண்ணியரே தாங்கள் யெல்லாப்புராணங்களையுமறிந்தவராகையால் கெருடபகவான் எவ்விடத்தில் தபசு செய்தார் எந்த மூர்த்தியைப் பூஜித்தார் என்ன ஜெபம்செய்தார் அவருக்குயெப்படி அமுர்தம் கிடைத்தது அவைகளையெல்லாம் விஸ்தாரமாக

அருளிச்செய்யவேண்டு மென்று சௌனகர் கேழ்க்க சூத புராணிகர்சொல்லத்தொடங்கினர், காசியப்பிரஜாபதியின் மனைவிகளில் சுபர்ணியென்னும் கருத்துருயென்னும் பெயர்பெற்ற இரண்டுமனைவிகளுடன் தபசுசெய்துக்கொண்டிருந்தார் அந்தச் சமயத்தில் சுந்திரவதிகளான உந்திபூத்தோன் குலத்திலுதித்த மந்திரபுத்தியுள்ள இருவருமொரு நாள் காலையில் கெங்கைக் கரைச்சென்று சிங்காரமான மங்கள ஸ்நானஞ்செய்ய அங்கிருந்து புரப்பட்டு நதிக்கரைச்சென்று அங்கிருக்கும் விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் மச்சமொன்றுமில்லாத எச்செகத்துக்கும் மேன்மைபெற்ற தெய்வலோகத்திலிருக்கும் ஐராவதமென்னும் யானையானது ஸ்நானம்செய்ய வருவதை கருத்துருவை யென்பவள் பார்த்து சுபர்ணியைக் கபடமாக ஜயிக்கநினைத்து விளையாடியபிறகு யானைதெய்வலோகம் சென்றபிறகு ஒ சுபர்ணீ! நீ எல்லா வல்லமையுள்ளவளாதலால் உன்னைவினவுகிறேன். இப்போது கெங்கையில் நீராடிச் சென்ற யானையானது கருப்பா வெளுப்பா நான்பார்க்கவில்லை உனக்குத்தெரியுமாவென்று கேட்க சுபர்ணை வெளுப்புயென்ருள். கருத்துரு அதின் கழுத்து கருப்புயென்ருள். இவ்விருவரும்பேசி முடிவில் யானையின் கழுத்துக் கருப்பானல் சுபர்ணை கருத்துருவுக்குப் பணிவிடை செய்கிறதென்றும் வெளுப்பாகயிருந்தால் கருத்துரு சுபர்ணைக்குப் பணிவிடைப் பண்ணுகிறதென்றும் இருவரும் சபதஞ்செய்துக்கொண்டு ஆச்சிரமம்சென்றிருக்கையில் கருத்துரு தன் புத்திரர்களி லொருவனுகிய தக்ஷகனைப்பார்த்து சுபர்ணைக்கும் தனக்கும் நடந்த சபதங்களைத் தெரிவித்து ஐராவதத்தின் கழுத்து வெளுத்திருக்குமாதலால் நீ கழுத்திற்போய்ச் சுற்றிக் கருப்பாகச்செய்யென்று உத்திரவுசெய்துவிட்டாள். தக்ஷகன் மாதாவின் கருத்திற்கிசைந்து அக்ஷணம் தெய்வலோக மடைந்து மச்சம் காணும்படி தங்கியிருந்தான். மருநாள் இவ்விருவரும் புரப்பட்டு சபதத்திற்கு உள்பட்டு கெங்கைக்கரையைக்கிட்டி யானைவருவதை எட்டியெட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். யானையானது வழக்கம்போல் அழுக்கைப்போக்குமன்னீரில் முழுகிக்கிளம்பப்பார்த்த சுபர்ணை, கருத்துருவை இருவரும் சபதத்திற்கு உடன்பட்டு சுபர்ணையானவள்

பணிவிடைப்பெண்ணுகி இருக்கிறபோது ஒருநாள் சுபர்ணையான வள் கருத்துருவைநோக்கி இப்பணிவிடைத்தொழி லெப்போது விடுதலையென்றுகேட்க, தேவலோகத்திலிருக்கும் அமுர்தத்தை உன்மகன் எனக்கருளினு லப்பணிவிடைத்தொழில் நீங்குமென் றுசொல்ல, சுபர்ணை அக் கருத்துக்கிசைந்து ஜலம்கொண்டுவரு தல், விறகு ஒடித்துவருதல், பிள்ளைகளைத் தூக்குதல், வீடுகளைச் சுத்தஞ்செய்தல் முதலிய பணிவிடைத்தொழிலைச் செய்துவந் தாள். இப்படியிருக்கையில் ஒருநாள் அப் பணிப்பெண்ணுகிய சுபர்ணையானவள் விறகுக்கு வெளிப்பட்டுச் சத்தியத்திற்குக் கட் டுப்பட்டுப் பக்தியோடு கடவுளைத்தியானித்துப் புத்திரனைப் பெற நினைத்துக் கருத்துருவிடத்தில் உத்திரவுபெற்றுப் பர்த்தாவின் ஆச்சிரமத்துக்கு எதேச்சையாகச்சென்ருள். அங்கே நிஷ்டை யிலிருக்கும் பர்த்தாவாகிய காசிபரைக்கண்டு துயரங்கொண்டு தனக்கு வந்திருக்கும் மனக்குறையையும் தாசி பாபத்தையும் சொல்லித் துயரப்படுகையில் முனீச்வரர் கண்டு கிருபைகொ ண்டு பயப்படாதேயென்று ஆசீர்வதித்து தேவலோகத்திலிருக் கும் அமுர்தத்தைக் கொண்டுவரும்படியான புத்திரனை அளிக் கிறேனென்று அனுக்கிரகித்து தேகத்தை ஸ்பரிசித்து உன் குக்ஷியில் நான்கு முட்டைகள் பிறக்கும் அம்முட்டைகளை ஆயி ரம்வருஷம் காப்பாற்றிவா வென்று அருளி விடைகொடுத்தார். அவ்வனுக்கிரகத்தைப்பெற்று யஜமானியாகிய கருத்துருவிடம் வரும்போது காசிபருடைய வாக்கின்படி ஒரு முகூர்த்தத்துக் குள் நான்கு முட்டைகளைப்பெற்று பர்த்தாவின் உத்திரவுப்படி பாதுகாத்துவந்தாள். பிறகு ஒருநாள் சுபர்ணையானவள் தாசி வேலையின் கஷ்டம் சகிக்காமல் வருத்தப்பட்டு 200 வருஷம் சென்றதும் ஒரு முட்டையை உடைத்தாள். அம்முட்டையா னது மின்னல் உருவமாய் ஆகாயத்திற்சென்று மேகத்தில் மறை ந்தது. பின்னும்சில நாட்கள்சென்று பின்னும் ஒருமுட்டையை உடைக்க அது இந்திரதனுசாகிப் பலவித வர்ணத்துடன் ஆகா யத்திற்சென்றது. சுபர்ணையானவள் 500 வருஷம் சென்று மூன் ருவது முட்டையை உடைத்துப்பார்கக இடுப்புக்குமேல் பாதி உருவிருக்கக்கண்டு மனம்விண்டு வருத்தங்கொண் டிருக்கையில்

அம்முட்டையிலிருந்து பிறந்த அருணனென்று பெயர்வகித்த மஹாபுருஷனுனவர் சூரிய சாரதியாயமைந்து அத்தியாபி உதயகாலத்தில் அருண னுதயமாயிற்றென்று சொல்லும்படியான பதவியிலிருந்து சாரத்தியம் செய்துவருகிருர். பின்பு ஆயிர வருஷம் அன்புடன் காத்துவந்த முட்டையானது ஜன்மாந்திர பாக்கியத்தால் இம்மூவுலகும் புகழத்தக்கப் பக்ஷிராஜனென்றும் கெருடனென்றும் பெயர் பெற்ற புத்திரன் உற்பத்தியானதைத் தாயார்கண்டு மனங்களிகொண்டு வளர்த்துவருநாளில் ஒருநாள் புத்திரனிடத்தில் தனக்குக் கிடைத்த பணிவிடை வேலைகளையும் அந்தவேலை உன்னுல் நீங்கவேண்டு மென்றும் சொன்ன தாயின் வார்த்தையைக்கேட்டு வருத்தப்பட்டு தாயாரைச் சமாதானப்படுத்தி அமுர்தம்கொண்டுவர துரிதப்பட்டுப் புறப்படுகையில், ஆகாயவாணியானது கருடனைப்பார்த்து, ஓ கருடனே! பஞ்சாக்ஷரஜெபம் சிவபூஜை இவை யில்லாவிட்டால் காரியம் சித்தியாகாது உன் பிதாவாகிய காசிபரிடஞ்சென்று மந்திர உபதேசங்கொண்டு அவருடைய அனுககிரகத்தால் அமுர்தத்தை யடைந்து மாதாவை விமோசனஞ் செய்யென்று சொன்னதைக் கேட்ட கெருடன், தாயாரிடம் விடைபெற்றுப் பஞ்சவரத்தையும் வகித்துப் பஞ்சபூத ஸ்வரூபியான கஞ்சமலர்ப் பாதத்தைப் பூஜிக்க அஞ்சாமற் சென்று புன்னுகவனமடைந்து அங்கிருக்கும் மார்க்கண்டேயர், வாமதேவர், ஜாபாலி, அருணர், கண்ணுவர், வீதிஹோத்திரர், ஹவிர்க்கம்மியர், குசாக்கிரியர் முதலிய ரிஷிகளைப்பூஜித்து ஒருமாதம் வசித்து ருத்திரமூர்த்தியை அர்ச்சித்து ரிஷிகளுடைய அனுக்கிரகம்பெற்று இவ்வாலயத்திற்கு கீழ்புறத்தில் ஆயிரம்தனுசுக்களளவுக்கப்பால் தன்பேருள்ள கெருடதீர்த்தம் யென்று தீர்த்தம் உற்பத்தி செய்து லிங்கப்பிரதிஷ்டையும் பண்ணிப் பூஜித்து மகாதேவருடைய வருளால் தேவலோகஞ் சென்று தேவர்களுடன் யுத்தம்புரிந்து வென்று அமிர்தகலசத்தைக்கொண்டுவந்து கருத்துருவுக்குக்கொடுத்து வருத்தத்துடனிருந்த தாயைப் பணிப்பெண் வேலையினின்றும் நீக்கி மனக்கவலையைப்போக்கித் தாயுடன் சுகமாக வசித்திருந்தார். ஆகையால் இந்த க்ஷேத்திரத்தை உலகில் பிரசித்தமாய்ச் சொல்லுகிருர்

கள். இந்த க்ஷேத்திரத்தை யார் கேட்கிறார்களோ அவர்கள் அமுர்தத்தைப் புசித்தவர்களைப்போல் தீர்க்காயிசாக இருந்து பிறகு கைலாசமடைந்து காமகுரோதாதிகளை நீக்கி பஞ்சமகா பாதகங்களைப்போக்கி சுவர்க்கலோகமடைவார்கள். இவ்விடத்திலச்சித்திரை அமாவாசைதினத்தில் ஸ்நானம்செய்து பூஜித்தவர்களுக்குச் சகல மனோபீஷ்டைகளையுமடைந்து புத்திரன் தனம் ராஜ்ஜியமுதலிய சகல போகங்களையுமடைவார்கள். கெருடபகவானனவர் தன் தாயாருக்கு மாதுருசிசுருஷைசெய்து மாதாவின் தாசிவேலையை விமோசனஞ் செய்ததற்குத் தேவர்கள் மகிழ்ந்து விலைமதிக்கக்கூடாத ஹாரம், கேயூரம், கடகம், கங்கணம் முதலியது அளிக்க அவைகளைப்பெற்று இந்த க்ஷேத்திரமடைந்து தேவர்களால் கொடுக்கப்பட்ட ஆபரணங்களைப் பரமசிவனுக்களித்து 64 வீடுகள் கட்டி பிராமணர்களை ஸ்தாபித்து அவர்களுக்கு வேண்டிய பசுக்கள் நிலங்கள் கொடுத்து தன்னால் ஸ்தாபனஞ்செய்த லிங்கத்திற்கு கருடேஸ்வரர் என்னும் பேர்கொடுத்துக் கீழ்புரத்தில் அஸ்வத்தப்பிரதிஷ்டை பண்ணிப் புகழ்பெற்று தன் லோகமடைந்தாராதலால் இந்த க்ஷேத்திரமானது புண்ணியப்பிரதமானது. அயனம், விஷு-கிரகணம் இப்பேர்ப்பட்ட புண்ணியகாலங்களில் பிர்ம்மதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள் முக்தி அடைவார்கள். அகத்தியபகவான் இக்ஷேத்திரத்தில் பூஜித்து அனுக்கிரகம்பெற்று கல்யாணவேஷ தரிசனம் சேவித்தார். பஞ்சாக்ஷரஜபம் செய்தவர்களும் தை மாதம் மகரஸ்நானம் செய்தவர்களும் மங்களவாரமென்னும் தினத்தில் ஸ்நானம்செய்து அன்னதானம், பாயசதானம், உதக தானம் (அதாவது தண்ணீர்ப்பந்தல்), தீபதானம், தாம்பூல தானம் முதலியது செய்தவர்கள் கைலாசபதவியடைவார்கள்

இவ்வித சரித்திரங்களை சூதபுராணிகர் நைமிசாரண்யர்களுக்குச் சொல்லிவந்த பவிஷிய உத்திரபுராணம் க்ஷேத்திர வைபவகாண்டத்தில் கேதாரமகாத்மியத்தில் கருடசரித்திரமென்னும் நூத்தி ஐந்தாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

---

## தீர்த்தவைபவமென்னும் நூற்றிஆறுவது அத்தியாயம்.

:o;

சூதபுராணிகர் நைமிசாரண்ய ரிஷிகளைப்பார்த்து இதுவரையில் க்ஷேத்திரமகிமைகளைச்சொல்லிவந்தேன்இனிசர்வலோகோபகாரமாக தீர்த்தமகிமையைச்சொல்லுகிறேன் கேளுங்கள். உலகத்தில் மனிதஜன்மமாய்ப்பிறந்து பகுத்தறிவுதெரிந்து ஞானமுள்ளவர்கள் பிர்ம்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட பிர்ம்மதீர்த்தமடைந்து தாமரை, ஆம்பல், நீலோத்பலம் முதலிய ஜலபுஷ்பங்களாலும், மல்லிகைமுல்லைமந்தாரைமுதலிய ஸ்தலபுஷ்பங்களாலும், பில்வம பலாசம் முதலியபுண்ணியவிருக்ஷங்களாலும், பாத்துவாஜர் அத்திரிமுதலிய மகரிஷிகளாலும் விளங்கப்பட்டு சைத்தியம் சௌரமம் மாந்தம் யென்னுமூன்றுவித்தகாதுகளுடனும் குயில் மயில் முதலிய பக்ஷிகளாலும் விளங்கும் பிர்ம்மதீர்த்தஞ் சென்று பிராமணுளுககுத்தக்ஷிணைகொடுத்து அவர்களால் அனுக்ஞை பெற்று பாபசமனத்தின் பொருட்டு, கழுத்துக்குமேல் வபனஞ்செய்வதாய்ச் சங்கல்பம்செய்து, செய்யபட்ட (1) பிர்ம்மஹத்தி முதலியபஞ்சமகாபாதகங்களும், (2) கடோரமானபொய் சொல்லுதல், (3) மனுஷியவிக்கிரயமுதலியது, (4)*சங்கலீகரணம், (5) அருஷ்கஸ்திரீகெமனம், (6) பரான்னபோஜனம், (7) சீமந்தாதிகர்ம்மரித்தம்,(8) அக்கியானத்தால்பலதடைவைசெய்தது (9) ஞானத்தால்ஒருதடைவை செய்ததுமுதலிய நவானும் நமவிதானும்பஹுநாம்பாஹுவிதானும்நிவர்த்திமித்தியங்கேசவிசர்சனம் செய்கிறேனென்று சங்கல்பம் செய்து க்ஷவரமான பிறகு பிர்ம்மதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து தேவதைகள் ரிஷிகள் பிதுருகள் முதலியவர்களுக்குதர்ப்பணம்செய்து திலாக்ஷதையோடு குசாக்கிரத்தால் க்ஷேத்திரபிண்டம்போட்டு பிதுருவம்சம் மாதுருவம்சம் பந்துக்கள் சிநேகிதர்கள் இஷ்டமித்திராள் முதலியவர்களும் பிண்டம்போட்டால் அப்பிண்டத்தால் பிதுருக்கள் முக்தி அடைவார்கள். மேலும் இந்தப்பிர்ம்ம தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஸ்வர்னதானம் அதாவது சக்திக்கிதக்கபடி செய்தவனுக்கு தரித்திரம் நிவர்த்தியாகும். இப்படிக்கு ஸ்நானஞ்செய்து

* சங்கலீகரணமென்பது கன்னிகை முதலியது விக்கிறயம் செய்தல்.

ஸ்வர்னதானஞ்செய்துப் பிறகு கிழக்கிலிருக்கும் கெருடதீர்த் தஞ்சென்று முன்போல் சங்கல்பம்செய்து ஸ்நானம்முடித்து தன்கோத்திரம், பேர் முதலியதை யுச்சரித்துப் பிதிர்தேவதைக ளின் மூன்றுவர்க்கம் பேர்களையுஞ் சொல்லி தர்ப்பணம்செய்துப் பால் தானஞ்செய்யவேண்டும். அதனால் சிவலோகமடைவான். மேலுஞ்சக்த்திக்குத்தக்கபடி அன்னதானஞ்செய்தால் இக்ஷேத் திரத்தில் ஒரு பிராமணனுக்குச்செய்த அன்னதானமானது கோடிதானஞ் செய்த பலன்கிடைக்கும், இருபத்திநான்குப் பிரா மணர்களுக்கு வைகாசிமாதத்தில், உப்பு, திதிப்பு,கார்ப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்புயென்னும் அறுசுவைகளுடனும்காதியம் வேசி யம் சோஷியம் போசியம் என்னும் நான்குவகை தினுசுகளுட னும் பிராமணபோஜனம் செய்வித்தவர்கள் புத்திராதிபலனை அடைவார்கள். ஒரு பிராமணனுக்காவது அன்னம்போட்டால் கருடபகவானுடைய அனுக்கிரகத்தினால் தனிகனாகப்பிறப்பான் பிறகு கேதாரதீர்த்தஞ் சென்று தாமரை ஆம்பல் செங்கழுநீர் முதலியபுஷ்பங்களால் சன்னதிகுத் தென்புரத்தில் பிரகாசிக் கும் கேதாரதீர்த்தத்தில் பஞ்சாக்ஷர மந்திரத்தால் ஸ்நானஞ் செய்து பிதுர்தர்ப்பணங்களும் முடித்து ஆமைரூபமான பிண்ட தர்ப்பணங்களும செய்யவேணும் அந்தப்பிண்டத்தால் ரணத்தி னின்றும விடுபடுவான். மேலும்அந்தத்தீர்த்தக்கரையில் வஸ்திர தானஞ்செய்யவேணும் சீதவாத உஷ்ணநிவர்த்தியின் பொருட்டு லிங்கமூர்த்திக்குப் பட்டுவாங்கி சமர்ப்பித்து அர்ச்சிக்கவேணும் அப்படி அர்ச்சித்தவன் அப்படிசெய்தவர்கள் நூல் ஒன்றுக்கு வருஷவீதம் கைலாசத்தில் வசிப்பார்கள். வஸ்திரங்கிடைக் காவிட்டால் கம்பளம் அல்லது கவுபீனமாவது கொடுக்க வேண்டும் அப்படிக கொடுத்தவர்கள் தரித்திரர்களாக இரு ந்தபோதிலும் ராஜாவாய்ப் பிறந்து குபேரனுக்குத் தகுதி யான ஐஸ்வரியவானாவான் கேதாரதீர்த்த ஸ்நானத்தால் எல்லாசித்தியுங் கிடைக்கும், பிறகு மோக்ஷமுமடைவார்கள். பின்பு கோவிலுக்கு மேல்புரமிருக்கும் வியாக்கிரபாதரால் நிர் மாணம்செய்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணப்புரப்பட்டவர் களுக்கே யெல்லாப் பாக்கியமும் கிடைக்கும். அந்த தீர்த்தத்

தில் மவுனமாய் ஸ்நானம்செய்து 'சப்ததே அக்நே' என்னும் மந்திரத்தை மனதில் நினைத்து ஸ்நானஞ்செய்து வியாக்கிர பாதர் அகஸ்தியர் இவர்களுக்கு தற்பணஞ்செய்து திருப்திசெய் தவர்கள் அகம்மியா, கமனம், நிஷித்தபக்ஷணம், ஆசாரஸீகம், விருதபங்கம், பிராமணதூஷகம், நித்தியகர்மத்தை விடுதல், வருணச்சிரமம் தவறுதல், மாதாபிதாக்களைச் சேவிக்காமலிருத் தல் முதலிய தோஷங்கள் நிவர்த்தியாகும். வியாக்கிரபாதரு டைய அனுக்கிரகத்தால் சகல பாபங்களினின்றும் விடப்பட்ட வனய் சாயுச்சிய பதவியடைவான் மகர மாசத்தில் ஸ்நானஞ் செய்து பூஜிக்கவேண்டும். ஒருநாள் மூன்றுநாள் ஏழுநாள் ஸ்நானஞ் செய்தவர்களுடைய பலத்தைச் சொல்ல ஆதிசேஷ னுலும் முடியாதென்றால் யார்தான் சொல்ல வல்லவர், ஒரு மாதம் முழுமையும் ஸ்நானஞ்செய்து யதாவிதி தானமும் செய் தவர்களுக்கு கைலாச பதவிகிடைக்க சந்தேகமில்லை. மாதா பிதா குருத்துரோகி, செய்நன்றி மறந்தவன், இவர்களுடைய பாபம் வியாக்கிரபாதருடைய கிருபையால் விடுபட்டுப்போம். பிர்ம்மாவினால் ஸ்தாபிக்கப்பட்ட குருவிந்தமரத்தடியில் பஞ்சா க்ஷரத்தை நூத்தியெட்டு தரம் ஜபித்து பிர்ம்ம தாண்டவமெ ன்னும்பேர்பெற்ற குருவிந்தமரத்தடியில் அணுமாத்திரம்தானம் செய்தவனுக்கு மேருதான பலனும் நல்ல குலம் கோத்திரம் வேதாத்தியானம் சுசி முதலிய பொருந்தியப் பிராமணனுக்கு கன்னிகாதானம் செய்தால் பிதுருக்கள் திருப்தியடைந்து பிர்ம் மலோகமடைவான். அந்த குருவிந்தமரத்தடியில் விருஷ உத் சர்சனம் செய்தவன் விருஷபத்தின் ரோமத்தின் சங்கியைப்படி சிவலோகத்தில் வசிப்பான் அவ்விடத்தில் பிதுர்சிரார்த்தம் செய் தவர்களுக்கு பிதுருகள் அமிர்தபானம் பண்ணினவர்களாய் சிவ லோகத்தில் வசிப்பார்கள் (கோசாம்பிரமாணம்) பசுவின் தோல் அவ்வளவு நிலம்தானஞ்செய்தவர் வாங்கினவரும் சிவரூபத்தை அடைவார்கள் பங்குனி மாதம் தொடங்கி ஆடி மாதம் வரைக் கும் லிங்கரூபிக்கும், பிர்மேஸவரிக்கும் பஞ்சாமிர்தம் பால் பஞ்சகவ்யம் சுத்த ஜலம் இவைகளால் அபிஷேகம் செய்தவர் கள் கோடி குலம் சுத்தமடைந்து சிவசாயுச்சியத்தை அடை

வார்கள் சக்திக்குத்தக்கபடிகருப்பஞ்சாறு அபிஷேகம்செய்தவர்களிடத்தில் பரமசின் அருள்புரிந்து தன் பதத்தை கொடுப்பார். சித்திரை மாதம் சித்திராபௌர்ணமியில் பஞ்ச தீர்த்தத்திலும் தீர்த்தங்கொண்டுவந்து நூறு கடங்கள்வைத்துப் பூஜித்து அபிஷேகம் செய்து நைவேத்தியம் வாத்தியம் முதலிய உபசாரஞ் செய்தவர்கள் சகல போகங்களுடன் திவ்ய விமானமேரிச்செல்லுவார்கள் அன்னதானத்தால் சிவசாயுச்சியத்தை யடைவான், வட புறத்திலிருக்கும் கஜதீர்த்தத்தில் ஒவ்வொரு மாதமும் அஷ்டமியில் ஸ்நானம் செய்தவன் சாயுச்சியமடைவான் (இந்திரஇதி) மந்திரத்தால் ஜபம்செய்து ஸ்நானம் செய்தவர் மகா பாதகத்தினின்றும் விடுபடுவார் சூத்திராள் பஞ்சாக்ஷர மந்திரம் ஜபம்செய்து ஸ்நானம்செய்யவேணும் கஜதீர்த்தத்துக்குச் சமீபத்திலிருக்கும் சிவசன்னதியில் வெங்கலப்பாத்திரத்தில் பாயச தானம் செய்யவேணும் அப்படிச்செய்தவர் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் புருஷார்த்தத்தை அடைவான் ராஜாவாயும் பிறப்பான் இந்த ஸ்தலத்தில் புஷ்பத் தோட்டம் போட்டு மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ஷண்பகம் வைத்துப் பயிராக்கினவனுக்குப் பகவான் திருப்தி அடைந்து சாயுச்சிய பதவி கொடுப்பார். கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை உதயத்துக்கு முந்தி ஸ்நானஞ்செய்து பஞ்சாக்ஷர ஜபம் செய்பவர் குஷ்ட முதலிய மகா ரோகங்களினின்றும் விடுபடுவார்கள். கார்த்திகை பானுவாரத்தில் ஒரு பிராமணனுக்கு அன்னமிட்டவன் அன்னத்துக்கு ஒரு வருஷம் வீதம் சிவலோகத்தில் வசிப்பார்கள். சிவனுக்கு பூசாரகமான பாத்திரங்கள் அர்கசியம் தூபம் கர்ப்பூரம் முதலியதுக்களுக்கு பாத்திரங்கள் வாங்கி சத்திரம் சாமரம் முதலிய உபசார சாமான்களும் டன்கா காகளம் முதலியவாத்தியங்களும் ஏற்படுத்தினவன் சாம்பிராச்ஜிய பதவி யடைவார். இந்த ஸ்தலத்தில் வியாக்கிரபாதருக்காக புக்தி முக்தி பிரதமான நிர்வாணதாண்டவம்செய்த மூர்த்தியை மாசி மாதம் பௌர்ணமியில் தரிசித்தவன் சிவலோக மடைவான். ஓ முனீஸ்வரர்களே! மகா புண்ணியசாலிகளான நீங்கள் கேட்டபடியால் இம்மகிமைகளைச் சொன்னேன் இந்தப் புராணமத்தி

யில் ஒரு சுலோகமாவது அல்லது பாதி சுலோகமாவது சொல்லியும் கேட்கும்போது கேட்கும்படி செய்தவர்களும் சிவ சாயுச்சியமடைவார்கள். இந்த க்ஷேத்திரத்தை தெக்ஷிணசிதம்பரமென்றும் சொல்லப்படும் பதஞ்சலி முதலிய மகான்கள் நடராஜதரிசனஞ்செய்து நல்லபதவி அடைந்தார்கள். இந்தப் புராணத்தைப் படிக்க சங்கல்பம் செய்து என்னபலனை அடைய என்று பிரார்த்தித்து படித்தால் அதன்படி பலனை அடைவார்கள் மனோபீஷ்டப்படி சகலமும் சித்திக்கும். பவிஷிய உத்தார புராணம் தக்ஷிணகேதார மகாத்மியத்தில் க்ஷேத்திர வைபவ காண்டம் தீர்த்தவைபவகதனம் என்னும் நூற்றிஆராவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.)

முற்றுப்பெற்றது.

ஸ்காட்டிவ்ஷ் பிராஞ்சு பிரஸ், நாகபட்டணம். 14.—159.

## நாகை இந்துமதாபிமான சங்கம்.

உள்ளூர் வெளியூர் மெம்பர்களுக்கு வருடசந்தா ரூபாய் 1 தான்.

இச்சங்கம் ஒவ்வொரு பௌர்ணிமையிலும், மாலை 7 மணிக்கு நாகையில் கூடுமாதலால் இதில் உபந்நியாசம் செய்ய பிரியமுள்ளவர்கள் 10 தினங்களுக்குமுன் விபரமாய் சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்களுக்கு எழுத்து மூலமாய் தெரிவித்துக் கொண்டால் வேண்டும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

சங்கத்தார் வெளியூர்களிலும் போய் மாதமொருமுறை உபந்நியாசங்கள் செய்யத்தீர்மானித்திருப்பதால், வெளியூர்களிலுள்ள அபிமானிகள் 30 தினங்களுக்கு முன்னாடியே அக்கிராசனாதிபதியவர்கட்க்கு எழுதிக் கொண்டால் அதற்கும் வேண்டும் ஏற்பாடுகள் செய்யப்படும்.